பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அந்த DNT சான்றிதழை மிகக் குறுகிய காலத்திற்குள் வழங்குவதற்காக மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் ஐயா, ஓ.பி.எஸ். அவர்களுக்கும், அவை சார்ந்த அமைச்சர் பெருமக்களுக்கும், ஒட்டுமொத்த 68 சமூகத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

95—

கால்நடைக் கிளை நிலையம்

***7171—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணச்சநல்லூர் தொகுதி, மணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், சா. அய்யம்பாளையம் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சா. அய்யம்பாளையம் கிராமத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய புதிய கால்நடைக் கிளை நிலையம், அரசாணை எண் 14, கால்நடை பராமரிப்பு,

2019 ஜூலை 12]

பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 5–2–2018–ன்படி ரூபாய் 2 இலட்சத்து 97 ஆயிரம் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.*

திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு, அறிவு, துணிவு, கனிவு, ஈகை, இரக்கம், சிந்தனைத்திறன், ஆற்றல், செயல்வடிவம், பன்மொழிப்புலமை கொண்டு, அஞ்சுவது என்பது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை; வாழும் மனித தெய்வம், வரலாற்றின் வடிவம், ஏழைகளின் ஒளிவிளக்கு, திராவிடத்தின் திருவிளக்கு, தமிழகத்தின் கலங்கரை விளக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

தமிழகத்தின் இன்றைய, நாளைய, எதிர்கால, நிரந்தர முதல்வர், ஒப்பற்ற தலைவர்; 'அமைதி, வளம், வளர்ச்சி' என்று தமிழகத்தை வழிநடத்தி வரும் சேலத்து சிங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) கழக இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும்; தேனியின் தங்கம், சபையின் சிங்கம், அம்மாவின் எளிமையின் பிறப்பு, எவருக்கும் அஞ்சாத எண்ணம், எங்களின் அடையாளம், கழக ஒருங்கிணைப்பாளர் தமிழக துணை முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூர் தொகுதியில், சா. அய்யம்பாளையம் ஊராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களான மேலூர், கீழூர், ராசம்பாளையம், சாலக்காடு, கருங்காடு, பிச்சாயிப்பள்ளம், தத்தமங்கலத்தையும் சேர்த்து 5 ஆயிரத்திற்கும்மேல் கால்நடை அலகுகள் உள்ளன. மேலும், அருகில் உள்ள கால்நடை மருந்தகமான மணச்சநல்லூர் 6 கிலோ மீட்டர் தொலைவிலும், திருவல்லாரை, கரியமாணிக்கம் ஆகியவை 8 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளதால், சா. அய்யம்பாளையம் கால்நடைக் கிளை நிலையத்தை மருந்தகமாகத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன. அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

திருமதி மு. பரமேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூர் ஒன்றியம், பெரகம்பி கிராமம் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளான சீதேவிமங்கலம், மணியாங்குறிச்சி, வாழையூர், மாவிளங்கை, தொட்டியப்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள மொத்த கால்நடைகளான மாடுகள் 1,980, வெள்ளாடுகள் 3,700, செம்மறியாடுகள் 9,250, கோழிகள் 6,000 ஆகியவை பயன்பெற, அருகில் உள்ள கால்நடை மருந்தகமான எதுமலை அல்லது செட்டிக்குளம் சென்றுவர 7 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அதிலும், எதுமலை கால்நடை மருந்தகம் சென்றுவரும் வழியின் இடையில் forest, சுமார் 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளது. அதனால், மேற்கூறிய கிராமப் பகுதிகளில் உள்ள கால்நடைகள் பயன்பெறும்வகையில் பெரகம்பி கிராமத்திலேயே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 12]

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 41,000 மாட்டினங்கள், 68,000 ஆட்டினங்கள், 2 இலட்சத்து 66 கோழியினங்கள் உள்ளன. இவற்றுக்கு மருத்துவ சேவைகள் வழங்கிடுவதற்காக 15 கால்நடை மருந்தகங்கள், 3 கால்நடை நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது* forest area*–ல் இருக்கிறது என்றும், எனவே, அங்கே அதிக அளவிலே கால்நடைகள் இருப்பதாகவும் சொல்லியிருக்கின்றார்கள். கால்நடை பராமரிப்புத் துறையினுடைய அதிகாரி பெருமக்களை அங்கே அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. இராமலிங்கம் அவர்கள்.*

திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘இருந்தாலும், மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும்
இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்’

என்று வாழ்ந்து மறைந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைக் கூறி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை வழிநடத்துகின்ற மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு தோளோடு தோள் நின்று உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர், மரியாதைக்குரிய அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–30

ஈரோடு மாநகராட்சி, சூரம்பட்டி பகுதியில் இருக்கின்ற கால்நடைக் கிளை நிலையத்தை கதிராம்பட்டி ஊராட்சிக்கு

மாற்றிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பேரோடு ஊராட்சியில் இருக்கின்ற கால்நடைக் கிளை நிலையத்தை மருந்தகமாக மாற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சூரம்பட்டி பகுதி மாநகராட்சிப் பகுதியில் இருப்பதாலும், அங்கே ஒரு Super Speciality மருத்துவமனை இப்போது ஆரம்பிக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அதன் பயன்பாடு குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை கதிராம்பட்டி ஊராட்சி, கதிராம்பட்டிக்கு மாற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, ஈரோடு மாநகராட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களால், கடந்த ஆண்டு 24 மணி நேரமும் இயங்கக்கூடிய* Multi Speciality Hospital *ஒன்று துவக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சூரம்பட்டி பகுதியும் ஈரோடு மாநகராட்சிப் பகுதியில் வருகின்ற காரணத்தால், கதிராம்பட்டி ஊராட்சிக்கு கால்நடைக் கிளை நிலையத்தை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சூரம்பட்டி ஊராட்சியில் இருக்கின்ற அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை, கதிராம்பட்டி ஊராட்சிக்கு மாற்றுவதற்குண்டான ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***1410—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—